**3808**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : 5 × 1 = 5

1. நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர்

   – செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக.

2. முழுநிலவு மிகவும் அழகாக இருக்கிறது

   – உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.

3. பூங்கோதை பொம்மை செய்வித்தாள்

   – தன்வினை வாக்கியமாக மாற்றுக.

4. ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் படிக்க வேண்டும்

   – கட்டளை வாக்கியமாக மாற்றுக.

5. காமராசரை அறியாதவர் எவரும் இலர்

   – உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக.

6. கண்ணகி சீற்றம் கொண்டாள் ; மதுரை அழிந்தது

   – கலவை வாக்கியமாக மாற்றுக.

7. 'நான் புத்தகம் கொண்டு வருகிறேன்'' என்று செல்வி தோழியிடம் கூறினாள்.

   – அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) வாழையடி வாழையாய்

ஆ) மழைகண்ட பயிர்போல

இ) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

வண்ணாத்திப்பூச்சி பூவில் உக்கார்ந்தது

10. மரபுப்பிழை நீக்கி எழுதுக :

புறா கூவ குரங்கு கத்தியது.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

டாக்டரின் ஆலோசனைப்படி நடந்துகொள்ள வேண்டும்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

அடடா இசைகேளாத செவிகளா இவை இசை நுகராத செவிகட்கு என்பாடல் இனிக்காதே சரி இருக்கட்டும்.

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக : ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) வீழ்வார் ஆ) விடுத்து.

14. பிரித்து எழுதுக :

அ) தாழ்வின்றி ஆ) நினைவகற்றாதீர்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக. ( இரண்டனுக்கு மட்டும் )

அ) மாநெறி

ஆ) நெடுந்தேர்

இ) எறிதரங்கம்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக : 20 × 1 = 20

16. இரண்டு மாத்திரை அளவுபெறும் எழுத்து

அ) உயிர்நெடில் ஆ) உயிர்க்குறில்

இ) உயிர்மெய் ஈ) மெய்யெழுத்து.

17. குற்றியலுகரம் ................ வகைப்படும்.

அ) ஐந்து ஆ) மூன்று

இ) ஆறு ஈ) நான்கு.

18. தனிமொழிக்கு எடுத்துக்காட்டு ....................

அ) நிலம் ஆ) தாமரை

இ) சாலச்சிறந்தது ஈ) எட்டு.

19. "இப்பாடற்பொருள் யாது ? என ஆசிரியர் கேட்பது

அ) அறியாவினா ஆ) ஐயவினா

இ) ஏவல் வினா ஈ) அறிவினா.

20. நேற்று வருவான் என்பது .............. வழு ஆகும்.

அ) பால் ஆ) இடம்

இ) திணை ஈ) காலம்.

21. எற்பாடு என்பது .................... எனப் பிரியும்.

அ) எல் + பாடு ஆ) எற் + பாடு

இ) எ + பாடு ஈ) எம் + பாடு.

22. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது ....................

அ) முன்பனிக்காலம் ஆ) குளிர்காலம்

இ) கார்காலம் ஈ) இளவேனிற்காலம்.

23. செப்பலோசை பெற்று வருவது .................... .

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா

இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா.

24. அளவடியை ................ என்றும் கூறுவர்.

25. வெறுமை + இலை என்பது புணர்ந்து ............... என வரும்.

26. நிரை கவர்தல் ...................... திணையாகும்.

27. பெருந்திணை என்பது ....................... .

28. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன ............... ஆகும்.

29. ஒன்றனைப் புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும் ............... அணியாகும்.

30. ஆசிரியப்பா ................... வகைப்படும்.

31. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) பொன்னன் | — | ஏவல் வினைமுற்று |
| ஆ) செல்வீர் | — | தெரிநிலை வினைமுற்று |
| | — | குறிப்பு வினைமுற்று. |

32. நேரசையின் வாய்ப்பாடு ................. .

அ) மலர்

ஆ) நாள்.

இ) காசு

ஈ) பிறப்பு.

33. கடலும், கடல் சார்ந்த இடமும் ............... நிலமாகும்.

34. குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் .................. .

35. மீமிசை ஞாயிறு .................... .

அ) இரட்டைக் கிளவி ஆ) ஒரு பொருட் பன்மொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) ஒன்றொழிப்பொதுச் சொல்.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் *ஆறனுக்கு* மட்டும் விடையளி : 6 × 2 = 12

36. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. ஆய்தக்குறுக்கமாவது யாது ? விளக்குக.

38. பொதுமொழியை விளக்குக.

39. வியங்கோள் வினைமுற்று எவ்வெவ் பொருளில் வரும் ? எடுத்துக்காட்டு தருக.

40. பெயரெச்ச வாய்ப்பாடுகள் யாவை?

41. கொளல் வினா, கொடை வினா - இவற்றை விளக்குக.

42. வழுவமைதி என்றால் என்ன ?

43. இனமொழிவிடை என்றால் என்ன ?

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் *ஆறனுக்கு* மட்டும் விடையளி : $6 \times 2 = 12$

44. வடகிழக்கு - எவ்வாறு புணர்ந்தது ?

45. முதற்பொருள் என்பது யாது ?

46. பாடாண்திணையை விளக்குக.

47. வெண்பாவின் வகைகள் யாவை ?

48. 'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு'' - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டுக.

49. தற்குறிப்பேற்ற அணி

*அல்லது*

பிரிமொழிச் சிலேடை அணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

'ஒற்றைக் குடும்பம்தனிலே - பொருள்
ஒங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே - மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
ஏவல்கள் செய்பவர் மக்கள் - இவர்
யாவரும் ஒருகுலம் அன்றோ ?
மேவி அனைவரும் ஒன்றாய் - நல்ல
வீடு நடத்தல் கண்டோம்.
தெய்வங்கள் பலப்பல சொல்லி - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்.
உய்வது அனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஒருபொருள் ஆனது தெய்வம்.

*வினாக்கள் :*

அ) குடும்பத்தில் தந்தையின் பணி யாது ?

ஆ) தாய் செய்யும் உதவி யாது ?

இ) பிள்ளைகளின் கடமை யாது ?

ஈ) குடும்பம் எவ்வாறு நடைபெற வேண்டும் ?

உ) தெய்வம் பற்றி பாரதியார் கூறும் உண்மை யாது ?

VII. 52. உங்கள் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைக்க வேண்டி அஞ்சலகத்தலைவருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக. 1 × 10 = 10

*அல்லது*

களவுபோன உன் மிதி வண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு கேட்டு காவல்துறை ஆய்வாளருக்குக் கடிதம் எழுதுக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) சிக்கனமும் சிறுசேமிப்பும்

ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு

இ) நாணயம் - தன் வரலாறு கூறுதல்.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) பசுவின் செயலும் கதை உணர்த்தும் நீதியும்.

ஆ) 'கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிவந்தது' இப் பழமொழியைக் கொண்டு இக்கதையை ஆய்க.

இ) அப்பாவு கணக்கில் 35 ரூபாய்.

ஈ) மண்ணாசை - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.